V12Eco www.Padasalai.Net விருதுநகர் மாவட்டம் www.TrbTnpsc.com

இரண்டாம் திருப்புதல் தேர்வு, பிப்ரவரி - 2024

-----

**வகுப்பு 12**

**பொருளியல்**

கால அளவு: 3.00 மணிநேரம் மதிப்பெண்கள்: 90

**பகுதி – I**

**குறிப்பு :** i) அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கவும். **20 x 1 = 20**

ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்துஎழுதவும்

1. பொதுவான விலையின் தொடர் உயர்வை குறிப்பிடும் கருத்து __________ ஆகும்

அ) மொத்த விலை குறியீடு ஆ) வாணிபச் சூழல்
இ) பணவீக்கம் ஈ) தேசிய வருவாய்

2. முதலாளிதுவத்தை பின்பற்றும் நாடு ________ ஆகும்

அ) ரஷ்யா ஆ) அமெரிக்கா
இ) இந்தியா ஈ) சீனா

3. PQLI என்பது ___________ ன் குறியீடு ஆகும்.

அ. பொருளாதார வளர்ச்சி ஆ. பொருளாதார நலன்
இ. பொருளாதார முன்னேற்றம் ஈ. பொருளாதார மேம்பாடு

4. கீழ்வருவனவற்றுள் எது ஓட்ட கருத்துரு?

அ. சண்டைகளின் எண்ணிக்கை ஆ. மொத்த சொத்து
இ. மாத வருமானம் ஈ. பண அளிப்பு

5. கீன்ஸின் கருத்துப்படி முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் எப்படிப்பட்ட வேலையின்மை காணப்படுகிறது

அ முழு வேலைவாய்ப்பு ஆ.தன் விருப்ப வேலையின்மை
இ.தன் விருப்பமற்ற வேலையின்மை ஈ.குறைவு வேலை வாய்ப்பு

6. ஒரு பொருளாதாரத்தில் இயக்கத்தை சேயின் விதி வலியுறுத்தியது

அ. தூண்டப்பட்ட விலைக் கருவி ஆ.தானியங்கும் விலைக் கருவி
இ.தூண்டப்பட்ட தேவை ஈ.தூண்டப்பட்ட முதலீடு

7. தேசிய வருவாய் உயரும் போது

அ. APC யின் மதிப்பு குறைந்து சென்று MPC யின் மதிப்பை நெருங்கிவிடும்
ஆ.APC உயர்ந்து APC யின் மதிப்பை விட்டு விலகிச் செல்லும்
இ.APC மாறாமல் இருக்கும்
ஈ.APC முடிவிலியை ( INFINITY) நெருங்கிச் செல்லும்

8. கீன்ஸின் கருத்துப்படி முதலீடு MEC ஐயும் சார்ந்தது

அ.தேவையையும் ஆ.அளிப்பையும் இ.வருவாயையும் ஈ. வட்டி வீதத்தையும்

9. ஃபிஷரின் பண அளவு கோட்பாடு பணத்தின் இந்த பணியின் அடிப்படையில் அமைக்கப்பட்டது

அ. மதிப்பளவு. ஆ. மதிப்பின் நிலைக்கலன்
இ. பரிவர்த்தனை கருவி ஈ.வருங்கால செலுத்துதல்களுக்கான அடிப்படை

10. கூலி மற்றும் மூலப்பொருட்கள் செலவு கூடுவதால் பொருட்களின் பொது விலை மட்டம் அதிகரிப்பது ........பணவீக்கம் ஆகும்

அ. செலவு உந்து ஆ.தேவை இழப்பு இ.ஓடும் ஈ.தாவும்

11. நெறிமுறை தூண்டல் என்பது

அ. உத்தம நிலை படுதல் ஆ.உச்ச நிலை படுதல்
இ. தூண்டுதல் நடவடிக்கை. ஈ. குறைவு நிலைப்படுத்துதல்

12. ரெப்போ விகிதம் என்பதன் பொருள்

அ. வணிக மங்கிகள் ரிசர்வ் வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்
ஆ. ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம
இ. அந்நிய செலாவணி விகிதம்
ஈ.நாட்டின் வளர்ச்சி விகிதம்

13. அயல்நாட்டு செலுத்து சமநிலை உள்ளடக்கிய இனங்கள்

அ.புலனாகும் பண்டங்கள் மட்டும் ஆ.புலனாகாத பணிகள் மட்டும்
இ.அ மற்றும் ஆ ஈ.பண்ட வாணிகம் மட்டும்

14. இறக்குமதி ஏற்றுமதியை விட அதிகமாக இருத்தலை கீழ்காணும் வழிகளில் எது சரி செய்யும்

அ.சுங்கத் தீர்வையைக் குறைத்தல் ஆ.ஏற்றுமதி வரியை அதிகரித்தல்
இ.ஏற்றுமதிக்கு ஊக்கமளித்தல் ஈ.இறக்குமதிக்கு ஊக்கமளித்தல்

15. கீழ்காண்பவற்றில் எது சார்க் உறுப்பினர் நாடு அல்ல

அ.பாகிஸ்தான் ஆ.ஸ்ரீலங்கா
இ.பூடான் ஈ.சீனா

16. ஆசியான் கூட்டங்கள் ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்

அ.2 ஆ.3 இ.4 ஈ.5

17. அரசின் வருவாய் வரவு கணக்கில் சேராதது

அ.வட்டி ஆ.இலாபமும் இலாப ஈவும்
இ.கடன்களை திரும்ப பெறுதல் ஈ.சொத்தில் இருந்து கிடைக்கிற வாரம்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

18. மண் மாசுவிற்கு முதல் நிலை காரணம்______
அ)பூச்சியை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் ஆ)நில மேம்பாடு
இ)விவசாய நிலங்கள் வழியாக பாய்ந்து ஓடும் மழைநீர் ஈ)இரசாயன உரங்கள்.
19. சர்வோதயா திட்டத்தை முன்மொழிந்தவர் யார்?
அ)மகாத்மா காந்தி ஆ)ஜெயபிரகாஷ் நாராயணன்
இ)எஸ். என். அகர்வால் ஈ)எம். என். ராய்
20. பொருளாதார அளவை இயலுக்கான மூலப்பொருள்______
அ)புள்ளிவிவரம் ஆ)பொருட்கள் இ)புள்ளியியல் ஈ)கணிதம்.

## பகுதி – II

**குறிப்பு** : ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7 x 2 = 14
**வினா எண் 30**க்கு கட்டாயமாக விடையளிக்கவும்

21. பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக
22. தேசிய வருவாய் இலக்கணம் கூறுக
23. தற்போதுள்ள சூழலில் ஆள் குறைப்பிற்கான காரணத்தைத் தருக
24. தேக்க வீக்கம் என்றால் என்ன
25. வெளி அங்காடி நடவடிக்கை என்பதன் பொருள் கூறு
26. பன்னாட்டு வாணிகத்தின் நன்மைகளில் ஏதேனும் இரண்டு குறிப்பிடுக
27. GST யின் கூறுகள் யாவை?
28. தலா கரிமில வாயு அதிகமாக வெளியேறும் நாடுகள் யாவை?
29. நிதி ஆய்வு பற்றி குறிப்பு வரைக
30. பொருளாதார அளவையியல் என்றால் என்ன?

## பகுதி – III

**குறிப்பு** : ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7 x 3 = 21
**வினா எண் 40**க்கு கட்டாயமாக விடையளிக்கவும்

31. பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தை தருக
32. தேசிய வருவாயின் பயன்களை பட்டியலிடுக
33. தொகுப்பு தேவை என்றால் என்ன அதன் கூறுகளை கூறுக
34. தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக
35. பணவீக்கத்தின் வகைகள் பற்றி எழுதுக
36. பண சந்தையையும் மூலதனை சந்தையையும் வேறுபடுத்துக
37. சார்க்கின் பணிகளை சுருக்கமாகக் கூறுக.
38. குறிப்பு வரைக: அ)பருவநிலை மாற்றம் ஆ)அமில மழை
39. இந்தியாவில் பொருளாதாரத் திட்டமிடல் பரிணாம வளர்ச்சியை மதிப்பிடுக.
40. பின்வரும் விவரங்களுக்கு திட்ட விலக்கத்தினை காண். 14,22,9,15,20,17,12,11

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும். 7 x 5 = 35**

41. அ) முதலாளித்துவம் சமத்துவம் கலப்புத்துவம் ஆகியவற்றின் தன்மையை ஒப்பிடுக. அல்லது
ஆ) பின்வரு விவரங்கள் இருந்து y மீது X மற்றும் X மீது y ஆகியவற்றினை கண்டறிக

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Y | 45 | 48 | 50 | 55 | 65 | 70 | 75 | 72 | 80 | 85 |
| X | 25 | 30 | 35 | 30 | 40 | 50 | 45 | 55 | 60 | 65 |

42. அ) தேசிய வருவாயை கணக்கிடும் முறைகளை விளக்குக. அல்லது
ஆ) நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக
43. அ) வேலையின்மை வகைகளை விவரி அல்லது
ஆ) புற விளைவுகள் என்ற கருத்தினையும் அதன் வகைபாடுகளையும் விளக்குக
44. அ) பெருக்கி இயங்கும் விதத்தினை விவரி. அல்லது
ஆ) ஒரு பொருளாதாரத்தில் பண வீக்கத்திற்கான காரணங்கள் யாவை
45. அ) பன்னாட்டு பண நிதியத்தின் நோக்கங்களை விளக்குக. அல்லது
ஆ) கூட்டாட்சி நிதியின் கொள்கைகளை விளக்குக..
46. அ) வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க அல்லது
ஆ) பல்வேறு வகையான திட்டமிடல் வகைகளை விவரி
47. அ) வெளிநாட்டு நேரடி முதலீட்டினால் ஏற்படும் நன்மைகளை குறிப்பிடுக.
அல்லது
ஆ) அரசின் செலவுகள் அண்மைக்காலத்தில் அதிகரிக்க காரணங்கள் யாவை விளக்குக.

\- - - - -

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com